**செய்தி வெளியீடு எண்: 793** **நாள்: 22.11.2017**

**<u>24.11.2017 அன்று நடைபெறுவுள்ள பல மாநிலங்களை உள்ளடக்கிய மாதிரி சுனாமி முன்னெச்சரிக்கை பயிற்சி (Multi State Tsunami Mock Exercise) தொடர்பான அறிவிப்பு</u>**

தமிழ்நாடு மற்றும் பிற கடலோர மாநிலங்களின் சுனாமி முன்னெச்சரிக்கை பற்றிய விவரங்கள் குறித்து, ஹைதராபாத்தில் உள்ள இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்பு (INCOIS) தெரிவிக்கின்றது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமானது, இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்புடன் (INCOIS) இணைந்து, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களிலுள்ள கடலோர மாவட்டங்களில், சில கிராமங்களை தேர்ந்தெடுத்து, சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கொண்ட மாதிரி பயிற்சியினை 24.11.2017 அன்று நடத்துகின்றது.

இப்பயிற்சியின் முன்னோட்டமாக, 22.11.2017 அன்று, சென்னை, வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில், முதன்மை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களின் தலைமையில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையக்குழு ஆலோசகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) வி.கே.தத்தா அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலோர மாவட்ட ஆட்சியர்கள், முப்படை அதிகாரிகள், காவல்துறை, கடலோர பாதுகாப்பு படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்துறை அலுவலர்களுடன் காணொலி காட்சி மூலம் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் 24.11.2017 அன்று நடைபெறவுள்ள மாதிரி சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை எவ்வாறு மேற்கொள்வது என விளக்கினார். மேலும், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையக்குழுவின் ஆலோசகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) வி.கே.தத்தா அவர்கள், தயார் செய்யப்பட்ட விளக்கக் காட்சிகள் மூலம் மாதிரி சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக விளக்கினார்.

சுனாமி வரும்பட்சத்தில், இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்பின் மூலமாக சுனாமி எச்சரிக்கை தொடர்பான முன்அறிவிப்புகள் பெறப்படும் போது, அத்தகவல்

பரிமாற்றமானது அரசுத்துறைகள் மூலம் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு எவ்வாறு சென்றடைகிறது என்பதை 24.11.2017 அன்று நடைபெறும் ஒத்திகையின் (Mock Demonstration) மூலம் சோதிக்கப்படும்.

இம்மாதிரி பயிற்சி ஒத்திகையானது, கீழ்க்கண்ட கடலோர மாவட்டங்களில் உள்ள கடலோர கிராமங்களில் நடைபெறும்.

| வ.எண் | கடலோர மாவட்டத்தின் பெயர் | மாதிரி சுனாமி பயிற்சி நடைபெறும் கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | சென்னை | நயினார்குப்பம்<br>ஊரூக்குப்பம் |
| 2 | கடலூர் | நாஞ்சலிங்கம்பேட்டை<br>சின்னூர் தெற்கு |
| 3 | காஞ்சிபுரம் | கோவளம்<br>பரமன்கேனிக்குப்பம் |
| 4 | கன்னியாகுமரி | ராஜக்காமங்களம்<br>கொளச்சல் |
| 5 | நாகப்பட்டிணம் | விழுந்தமாவடி<br>கீழையூர் |
| 6 | புதுக்கோட்டை | பொன்னகரம்<br>மீமிசல் |
| 7 | இராமநாதபுரம் | தேர்போகி<br>கீழமுந்தல் |
| 8 | தஞ்சாவூர் | கொல்லுக்காடு<br>சேதுபவசத்திரம் |
| 9 | தூத்துக்குடி | பழையக்காயல்<br>காயல்பட்டிணம் தெற்கு |
| 10 | திருநெல்வேலி | குட்டம் |
| 11 | திருவள்ளூர் | நாக்கத்தரவு<br>மெத்திப்பாளையம் |
| 12 | திருவாரூர் | கற்பகநாதர்குளம் – முனாங்காடு |
| 13 | விழுப்புரம் | தந்திராயன்குப்பம்<br>நொச்சிக்குப்பம் |

**எனவே, 24.11.2017 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறும் சுனாமி எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பயிற்சியானது, ஒரு மாதிரி ஒத்திகை பயிற்சி மட்டுமே ஆகும். இதுகுறித்து பொதுமக்கள் எவ்வித அச்சம் / பீதி அடையத் தேவையில்லை என தெரிவிக்கப்படுகிறது.**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**